**S.T.C No.135/2024**

**Dated: 02.04.2025**

**PW: 1** வெங்கட்ராமன்

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969)**

**<u>குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி –</u>**

**6)** லெமன்ஸ் கிளப் , கீதா காம்ப்ளக்ஸ் இலிருந்து அம்மா உணவகத்திற்கு எதிரே உள்ள வணிக வாளகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2015 ல் இவ்வாறு மாற்றப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டது என வைக்கப்பட்டுள்ள விளம்பர பலகையில் என்னுடைய கைப்பேசி எண் என்னிடம் காட்டப்பட்டுள்ள புகைப்படத்தில் கண்டுள்ளவாறு உள்ளது என்றால் சரிதான். எதிரி வெகுகாலமாக வெளியூரில் வசித்துவந்ததால் உங்களது கைப்பேசி எண்ணை பயன்படுத்தி கொள்கிறேன் என சொன்னதால் நான் அதற்கு சம்மதித்தேன்.சாட்சியால் ஒப்புகொள்ளப்பட்ட புகைப்படமானது **எ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) அம்மா உணவகத்திற்கு எதிரேயுள்ள வணிகவாளகத்தில் எவ்வளவு காலமாக லெமன்ஸ்கிளப் செயல்பட்டு வந்தது என்றால் ஒரு வருடமாக செயல்பட்டு வந்தது. அதன்பிறகு லெமன்ஸ் கிளப் எங்கு மாற்றம் செய்யப்பட்டது என்றால் கோவில்பட்டி மெயின்ரோட்டிற்கு மாற்றினார்கள். அவ்வாறுமாற்றம் செய்யும்போது நடைப்பெற்ற பூஜையில் என்னிடம்காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளவாறு நானும் எனதுமனைவியும் எதிரியும் கலந்துகொண்டோம் என்றால் சரிதான். நீண்டகால நட்பு என்றவகையில் அவ்வாறு நானும் எனதுமனைவியும் கலந்துகொண்டோம். சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்ட மேற்படி புகைப்படமானது **எ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) அதன்பிறகு மேற்படி கிளப்மானது இளையரசனேந்தல் ரோட்டிலுள்ள மீனாட்சி complex ற்கு மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான்.மேற்படி லெமன்ஸ் கிளப்பில் சந்தோஷ் குமார், வினோத் கண்ணன் ஆகியோர்களை வேலைக்கு சேர்த்து விட்டது நீங்கள் தான் என்றால் சரியல்ல. 2023 ல் லெமன்ஸ் கிளப்பில் வரவு செலவு பார்த்தபோது ரூ2,00,000/-பெறுமான ஆயத்த ஆடைகள் காணாமல்போன விபரம் தெரியவந்தவுடன் நீங்கள் தான் கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் மேற்படி சந்தோஷ்குமார் மற்றும் வினோத்கண்ணன் ஆகியோர்கள் மீது புகார் கொடுத்தீர்கள் என்றால் சரியல்ல. எதிரி தான் விக்னேஷ் என்பவர் மீது புகார் கொடுத்தார். அப்போது நான் உடன் சென்றேன்.

**9)** மேற்படி புகாரில் நீங்களும் கையொப்பம் செய்துள்ளீர்கள் என்றால் கையொப்பம் செய்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி புகாரின்படி குற்ற எண் 205/2024 என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் இந்த

வழக்கினை பற்றி எனக்குதெரியாது. மேற்படி குற்ற வழக்கில் லெமன்ஸ் கிளப்பின் ஒரு பங்குதாரர் என காவல் துறை விசாரணை செய்யும்போது சொல்லியிருக்கிறீர்கள் என்றால் யாரும் என்னை விசாரிக்கவில்லை. லெமன்ஸ் கிளப், ஜெய் ஆதித்யா மற்றும் லாயல் கிளாசிக் கிரியேசன் போன்றவற்றை நீங்கள் எதிரியுடன் இணைந்து நிர்வாகம் செய்து வந்தீர்கள் என்றால் சரியில்ல. மேற்படி லெமன்ஸ் கிளப் 2023 ல் பெரிய இழப்பை சந்தித்தது என்றால் அவ்வாறு சந்தித்தாக எதிரி என்னிடம் சொன்னார். அதனால் 2022 ல்லெமன்ஸ் கிளப்பின் வங்கி நடப்பு கணக்கு முடிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

10 அவ்வாறு இழப்பை சந்தித்த உடன் நீங்கள் முதலீடாக செய்திருந்த ரூ6,00,000/- மற்றும் ரூ1,00,000/- ஆக மொத்தம் ரூ7,00,000/- த்தை திருப்பி கேட்டீர்கள் என்றால் இது போன்று நான் எந்த முதலீடும் லெமன்ஸ் கிளப்பில் செய்யவில்லை. நீங்கள் எட்டையாபுரம் ரோட்டில் ரேணுகா டிரேடர்ஸ் என்ற பெயரில் தொழில் செய்து வருகிறிர்கள் என்றால் சரிதான். மேற்படி ரேணுகா டிரேடர்ஸ் -ன் ஜீஎஸ்டி , ஆர்சி ஆகியவைகள் உங்களது மனைவி பெயரில் உள்ளன என்றால் சரியல்ல. என்னுடைய பெயரில் உள்ளன. இந்த ரேணுகா டிரேடர்ஸ் சம்பந்தமான வரவு செலவு, Salestax, ஜிஎஸ்டி போன்றவைகள் முறையாக பாரமரித்து வருகிறிர்கள் என்றால் சரிதான்.

11) ஜெய் ஆதித்யா மற்றும் லாயல் கிளாசிக் கிரியேசன் ஆகியவைகள் எதிரியின் மனைவி பெயரில் உள்ளன என்றால் சரிதான். மேற்படி 3 நிறுவனங்களில் லாபத்தொகையில் 2015 முதல் 2022 வரை ரூ22,00,000/-எதிரியின் மனைவி வங்கிகணக்கிலிருந்து உங்களது மனைவி வங்கிகணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2022 ல் லெமன்ஸ் கிளப்பின் வங்கி நடப்பு கணக்கு முடிக்கப்பட்டு விட்டதால் C.C account ( cash credit account) மூலமாக பரிவர்த்தனை நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது.

12) மேற்படி 3 நிறுவனங்களின் லாபத்தொகையில் 2015 முதல் 2022 வரை ரூ22,00,000/- எதிரியின் மனைவி வங்கி கணக்கிலிருந்து உங்களது வங்கிகணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் இது சம்பந்தமான பேங்க் ஸ்டேட்மெண்டை பார்த்தால் தான் சொல்லமுடியும். தாவாகடன் எந்த வருமானத்திலிருந்து கொடுத்தீர்கள் என்பதை உங்களது வழக்குஆவணங்களில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் ரேணுகா டிரேடர்ஸ்-க்கு பைப் மற்றும் மோட்டார் ஆகியவைகளை வாங்குவதற்கு பணம் வைத்திருந்தேன் அதைப்போல் பெங்களூரில் உள்ள ஒரு பிளாட்டை கிரையம் செய்தும் கையில் பணம் வைத்திருந்தேன்.

13) உங்களது கணக்கு வழக்குகளை பார்வையிட்டால் தாவாகடன்கொடுக்கும் அளவிற்கு கையில் பணம் இருந்ததாக இல்லையா என்ற விபரம் தெரியவரும் என்றால்சரிதான். 03.06.2023 ல் ரூ10,00,000/-கொடுத்ததாக சொல்லப்படுவதற்கு

எந்த ஆவணமும் எழுதிவாங்கவில்லை என்றால் சரிதான். ஏனெனில் பழக்கத்தின் அடிப்படையில் கொடுத்தேன். ரூ10,00,000/-த்தில் எதிரி 04.03.2024 ல் ரூ3,00,000/-த்தை திருப்பி செலுத்திவிட்டார் என உங்களது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். ஆனால் எந்த வங்கிகணக்கிலிருந்து அவ்வாறுசெலுத்தப்பட்டது என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் ரூ7,00,000/-த்திற்கு காசோலை கொடுக்கப்பட்டது என்பதை உங்களது புகார்மனுவில் குறிப்பிட்டுஉள்ளீர்களா என்றால் குறிப்பிட்டு உள்ளேன்.

14) புகார்மனுவில் குறிப்பிட்டுள்ளபோல் எதிரி உங்களிடமிருந்துகடனாக ரூ10,00,000/-பெறவில்லை என்றாலும் அதில் ரூ3,00,000/-த்தை திருப்பி செலுத்தவில்லை என்றாலும் ரூ7,00,000/-த்திற்கு காசோலை தரவில்லை என்றாலும் சரியல்ல. லெமன்ஸ் கிளப் மற்றும் லாயல் கிளாசிக் கிரியேசன் ஆகியவற்றிற்கு உங்களது மனைவி மற்றும் எதிரியின் மனைவி ஆகியோர்கள் பெயரில் இணைந்து பான்கார்டு வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். லெமன்ஸ் கிளப்,.மற்றும் லாயல் கிளாசிக் கிரியேசன் ஆகியவற்றிற்கு பதிலாக வேறு நிறுவனங்கள் ஆரம்பிக்கலாம் என்பதற்காக மேற்படி பான்கார்டுகள் வாங்கப்பட்டது. அவ்வாறு வாங்கப்பட்ட பான்கார்டுகள் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்ட இரண்டு எண்ணம் கொண்ட் பான்கார்டுகள் **எ.சா.ஆ.6**. ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**15)** லெமன்ஸ் கிளப், ஜெய் ஆதித்யா மற்றும் லாயல் கிளாசிக் கிரியேசன் ஆகியவைகளின் லாபத்தில் பங்கு எடுத்தது போல் நஷ்டத்திலும் பங்கு கொள்ளவேண்டும் என எதிரி உங்களிடம் சொன்னார் என்றால் மேற்கண்ட நிறுவனங்களில் நான் மூதலீடு எதுவும் செய்யவில்லை. எதிரி மேற்கண்ட நிறுவனங்களுக்காக ஆர்டர், பர்சேஸ் ஆகியவற்றிற்காக வெளியே சென்ற போது கொடுத்துவைத்திருந்த தாவாகாசோலையை தவறாக பயன்படுத்தியுள்ளீர்கள என்றால் சரியல்ல. எதிரிக்கும் உங்களுக்கும் இடையே கடன்கொடுத்தவர்மற்றும் கடன் வாங்கியவர் என்ற உறவுமுறையே இல்லை என்றால் சரியல்ல. தாவாகடன் சட்டப்படியான வசூலிக்கதக்க கடன் அல்ல என்றாலும் மேற்படி நிறுவனங்களின் நஷ்டத்தில் பங்குகொள்ளவேண்டும் என எதிரி உங்களிடம் சொன்னதால் அதிலிருந்து தப்பித்துகொள்வதற்கான தவறான சங்கதிகளை குறிப்பிட்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றாலும் சரியல்ல.

16) லெமன்ஸ் கிளப், ஜெய் ஆதித்யா மற்றும் லாயல் கிளாசிக் கிரியேசன் ஆகியவைகள் தற்போது இண்டோ மூன்அப்ரைல் Industry க்கு கிரையம் செய்து கொடுக்கபட்டுள்ளது என்றால் கிரையம் செய்து கொடுக்கப்பட்டதாக எதிரி என்னிடம் சொன்னார். ஜெய் ஆதித்யா நிறுவனத்தில் பில்களில் உங்களது கையொப்பம் உள்ளது என்றால் சரியல்ல. இண்டோ மூன்அப்ரைல் Industry ல் எதிரி சம்பளத்திற்கு வேலை வருகிறார் என்றால் அவ்வாறு தான் எதிரி

என்னிடம் சொன்னார். அதனால் எதிரி மீது போடப்பட்ட வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**Taken before me in open court, read over to the witness and admitted by the deponent to be Correct.**

**Sd/-Thiru.K.Baskar**
**Judicial Magistrate,**
**Fast Track Court(Magisterial Level),**
**Kovilpatti.**